# முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் தேசிய மீலாத் கவிதைப் போட்டி - 2021

**01. அறிமுகம்:**

எம் பெருமானார் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு வருடாந்தம் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால், தேசிய ரீதியாக நடாத்தப்பட்டுவரும் மீலாத் கவிதை போட்டி நிகழ்ச்சிகளை தற்போது நாட்டில் நிலவும் கோவிட-19 அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு சில வரையறைகளுக்கு உட்பட்டதாக இவ்வருடம் நடாத்துவதற்கு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

**02. கவிதைப் போட்டிக்கான தலைப்புக்கள்:**

1. உதவிடும் கரங்கள்தானே உம்மத்தின் தேவையாகும்.
2. பிறரையும் மதித்து வாழ்ந்து நபி புகழ் உயர வைப்போம்.
3. பொறுமைதான் உம்மத் எங்கள் உயரிய மகுடமாகும்.
4. எளிமையே எங்கள் நபியின் வெற்றியின் படிகளாகும்.
5. மாதரை மதித்து வாழ்தல் மாநபி மார்க்கமாகும்.

**03. விதி முறைகள்:**

1. மரபுக் கவிதைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். (அறுசீர் விருத்தமாகவோ எண்சீர் விருத்தமாகவோ அமையலாம்)
2. கவிதை சொந்தப் படைப்பாகவும் இதற்கு முன்னர் வேறெங்கும் வெளியிடப்படாததாகவும் இருத்தல் வேண்டும்.
3. குறைந்தது 32 வரிகளாகவோ கூடியது 40 வரிகளாகவோ அமைதல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு படைப்பினை மாத்திரமே அனுப்புதல் வேண்டும்.
5. மேலுள்ள தலைப்புக்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து கவிதை எழுத வேண்டும்.
6. எவர் மனதையும் புண்படுத்துவதாக கவிதை அமையக் கூடாது.
7. கவிதையின் கீழ் போட்டியாளர்கள் தங்கள் பெயர்களை குறிப்பிடக்கூடாது.

**04. போட்டி நிபந்தனைகள்:**

1. வயதெல்லை : 18 வயதுக்கு மேற்பட்டோராக இருத்தல் வேண்டும்.
2. ஒருவர் ஒரு விண்ணப்பத்தினை மாத்திரமே அனுப்ப முடியும்.
3. விண்ணப்பமானது கிராம உத்தியோகத்தர் அல்லது சமாதான நீதவான் அல்லது எமது திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் புகைப்படத்துடன் (2" X 2") அத்தாட்சிப் படுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பம் மற்றும் கவிதை என்பன பின்வரும் நிகழ்நிலை (online) முகவரியில் மாத்திரம் பதிவேற்றப்படல் வேண்டும். https://forms.gle/ZHUxgmMFpfK2AVAFA
5. விண்ணப்ப முடிவுத் திகதி: **2021.09.20**

**05. வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படும் முறையும் பரிசில்களும்:**

1. இலங்கையின் தலைசிறந்த நடுவர் குழாமின் மூலமாக கவிதைகள் பரீட்சிக்கப்பட்டு வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.
2. முதல் 3 இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதியான பரிசில்களும், 4 தொடக்கம் 10 வரையான இடங்களைப் பெறுவோருக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.
3. ஆள்மாறாட்டம் போன்ற முறைகேடான விடயங்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் வழங்கப்பட்ட பரிசு மீளப் பெற்றுக் கொள்ளப்படும் என்பதையும் போட்டியாளர்கள் கவனத்தில் கொள்ளவும்.

**குறிப்பு:** சிறந்த முறையில் அமையப்பெறும் கவிதைகள் தெரிவு செய்யப்பட்டு கவிதை நூலாக தொகுத்து வெளியிடப்படும் (பதிப்புரிமை திணைக்களத்திற்கு உரியது).

**எம்.எல்.எம். அன்வர் அலி**
**பணிப்பாளர் (பதில்)**
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்